# பத்திரிக்கைச் செய்தி

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுலவலர் திரு.கோ.சு.இராமராசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இம்மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீடு வேண்டி 113 மனுக்களும், வீட்டுமனை பட்டா வேண்டி 103 மனுக்களும், முதியோர் உதவித் தொகை வேண்டி 48 மனுக்களும், குடும்ப அட்டை வேண்டி 14 மனுக்களும், சத்துணவு அமைப்பாளர் வேலை வேண்டி 13 மனுக்களும், அங்கன்வாடி பணியாளர் வேலை வேண்டி 5 மனுக்களும், காவல் துறை சார்பாக 11 மனுக்களும், வங்கி கடன் கோரி 7 மனுக்களும் , சுனாமி வீடு வேண்டி 11 மனுக்களும் மற்றும் இதர அரசு நலத்திட்ட உதவிகள் கோரி 91 மனுக்கள் என ஆக மொத்தம் 416 மனுக்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டன. பெறப்பட்ட மனுக்கள் மனுதாரர் முன்னிலையில் விசாரணை செய்து அந்தந்த துறை அலுவலர்களிடம் வழங்கி உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கோ.சு.இராமதாசு அவர்கள் உத்தரவிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்(நிலமெடுப்பு) திருமதி.ந.ஜீவகனி, தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) திருமதி.ந. சசிகலா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.